★★★

- நமது படிப்பைச் சீர் செய்வோம்
- தலைமையின் வழிமுறை பற்றிய சில பிரச்சனைகள்

□ தோழர் மா சே துங்

நன்கொடை : 75 காசுகள்

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# நமது படிப்பைச் சீர் செய்வோம்

□ மா சே துங்

கட்சி முழுவதிலும் படிக்கும் முறையையும் ஒழுங்கையும் சீர் செய்ய வேண்டும் என்ற திட்டத்தை நான் முன் வைக்கிறேன். காரணங்கள் வருமாறு:

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் இருபது ஆண்டுகள், என்பது மார்க்ஸிய லெனினியத்தின் அனைத்தும் தழுவிய உண்மையை சீன புரட்சியின் நடைமுறையோடு மேலும் மேலும் நெருக்கமாக ஒன்றிணைத்த இருபது ஆண்டுகள்ஆகும். நமது கட்சியின் பிள்ளை பருவத்தில் மார்க்ஸிய லெனினியத்தைப் பற்றி நமது அறிவு எவ்வளவு மேலெழுந்த வாரியாக, எவ்வளவு அற்பத்தனமாக இருந்தது என்பதை நாம் நினைவுபடுத்திப் பார்ப்போமேயானால் இப்பொழுது நமது அறிவு எவ்வளவு ஆழமாகவும் செழுமையாகவும் இருக்கிறது என்பதை நம்மால் காணமுடியும். துன்பசுமை ஏறிய சீன தேசத்தின் மிகச் சிறந்த புதல்வர்களும், புதல்விகளும் நமது நாட்டையும், மக்களையும் காக்கும் உண்மையைத் தேடி ஒருவர் பலியான இடைவெளியை இன்னொருவர் நிரப்ப தங்கள் இன்னுயிர்களைத் தியாகம் செய்து நூறாண்டு காலம் போராடினார்கள். இது நம்மை உணர்ச்சி பொங்க மகிழ்ந்து பாடவும், கண்ணீர் சொறியவும் தூண்டுகிறது.

முதல் உலகப் போருக்கும் ரஷ்யாவின் அக்டோபர் புரட்சிக்கும் பிறகுதான் நமது நாட்டை விடுதலை செய்வதற்குரிய உண்மைகளில் சிறந்த உண்மையை ஆயுதங்களில் சிறந்த ஆயுதத்தை மார்க்ஸிய—லெனினியத்தை நாம் கண்டுகொண்டோம் சீன கம்யூனிஸ்ட் கட்சி இந்த ஆயுதத்தைப் பயன்படுத்தும் முன்முயற்சியாளனாக பிரச்சாரகனாக, அமைப்பாளனாக இருந்துவந்திருக்கிறது. மார்க்ஸிய — லெனினிய தத்துவம் சீனப் புரட்சியின் ஸ்தூலமான நடைமுறையோடு இணைக்கப்பட்டவுடன் மார்க்ஸிய — லெனினியத்தின் அனைத்தும் தழுவிய உண்மையானது சீனப் புரட்சிக்கு முற்றிலும் புதியதோர் தோற்றத்தைக் கொடுத்தது.

www.padippakam.com

ஜப்பான் எதிர்ப்பு யுத்தம் வெடித்தெழுந்ததிலிருந்து நமது கட்சி மார்க்ஸிய — லெனினியத்தின் அனைத்தும் தழுவிய உண்மையை அடிப்படையாகக் கொண்டு இந்தயுத்தத்தின், ஸ்தூலமான நடைமுறையை கற்பதிலும், இன்றைய சீனத்தையும், இன்றைய உலகத்தையும், கற்பதிலும், ஒரு அடி முன்னெடுத்து வைத்தது. அத்துடன் சீன வரலாற்றை படிப்பதையும் தொடங்கி வைத்தது. இவை எல்லாம் மிகச் சிறந்த அறிகுறிகளாகும். இருப்பினும் நம்மிடம் குறைபாடுகள் இன்னும் இருக்கின்றன. அவைகள் மிகப் பெரியதாகவும் இருக்கின்றன. நாம் இந்த குறைபாடுகளை திருத்திக் கொள்ளா விட்டால், நமது வேலையிலும் மார்க்ஸிய-லெனினியத்தின் அனைத்தும் தழுவிய உண்மையை சீனப்புரட்சியின் ஸ்தூலமான நடைமுறையோடு இணைக்கும் நமது மாபெரும் லட்சியத்திலும் நாம் இன்னொரு அடிகூட முன்னேற முடியாது என்பது என் கருத்து.

முதலில் தற்போதைய நிலைமைகளை பற்றி படிப்பதை எடுத்து கொள்வோம். இன்றைய உள்நாட்டு நிலமைகளையும், சர்வதேச நிலைமைகளையும் படிப்பதில் நாம் சிலவெற்றிகளை பெற்றிருக்கிறோம். ஆனால் நமது கட்சியைப் போன்றதொரு பெரிய அரசியல் கட்சிக்கு நாம் சேகரித்துள்ள விஷயங்கள் சிறு துண்டுகளே. அரசியல், இராணுவம், பொருளாதாரம், கலாச்சாரம் ஆகிய ஒவ்வொரு அம்சங்களிலும் நமது ஆராய்ச்சி ஒழுங்கற்றதாகவே இருக்கிறது. பொதுவாகக் கூறினால் கடந்த இருபது ஆண்டுகளில் இந்த அம்சங்களில் விஷயங்களை சேகரிப்பதிலும், படிப்பதிலும் நமது வேலை ஒரு முறையானதாக, முழுமையானதாக இல்லை. புறநிலை எதார்த்தங்களைப் பரிசீலித்து படிப்பதுமான நிலையில் இல்லாதவர்களாக நாம் இருக்கிறோம். ''கண்ணைக் கட்டிவிட்டுக் கரிக்குருவி பிடிப்பதுபோல,'' அல்லது ''குருடன் மீனைத் தேடுவதுபோல'' நடந்து கொள்வது, தாறுமாறாகவும் கவனமற்றும் இருப்பது வெறும் வார்த்தை ஜாலங்களில் ஈடுபடுவது மேலோட்டமான அறிவோடு திருப்தி அடைவது—இது நமது கட்சித்தோழர்கள் பலரிடம் இன்னும் உள்ள மிக மிக மோசமான வேலைநடை. இந்த நடை மார்க்ஸிய லெனினியத்தின் அடிப்படை உணர்வுக்கு முற்றிலும் விரோதமானது. நிலைமைகளை உணர்வுபூர்வமாக ஆராயவேண்டும் என்றும், அகநிலை விருப்பங்களிலிருந்து தொடங்காமல் புறநிலை யதார்த்தங்களிலிருந்து தொடங்க வேண்டுமென்றும் மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோர் நமக்கு போதித்துள்ளனர். நமது தோழர்கள் பலர் இந்த உண்மைக்கு நேர்விரோதமாக செயல்படுகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

இரண்டாவதாக வரலாற்றைப் படிப்பதை எடுத்துக்கொள்வோம். ஒரு சில கட்சி உறுப்பினர்களும், அனுதாபிகளும் இந்த வேலையை எடுத்துக்கொண்ட போதிலும் இதை ஒரு ஒழுங்கான வழியில் செய்யவில்லை. பல கட்சி உறுப்பினர்கள் சென்ற நூற்றாண்டில் (அல்லது) புராதன காலத்தின் சீனவரலாற்றில் இன்னும் நுனிப்புல் மேய்பவர்களாகவே இருக்கின்றார்கள். புராதன கிரேக்க நாட்டைக் குறிப்பிடாமல் வாய்திறக்கவே இயலாதவர்களாய் இருக்கும் மார்க்ஸிய — லெனினிய அறிஞர் பலர் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் சொந்த முன்னோர்கள் விஷயத்தையோ மறந்துவிட்டார்கள். வருத்தப்பட வேண்டியதுதான். நடப்பு நிலைமைகளைப்பற்றியோ கடந்தகால வரலாற்றைப்பற்றியோ கவனமாக படிக்கும் நிலை இல்லை.

மூன்றாவதாக சர்வதேச புரட்சிகர அனுபவத்தைப் படிப்பதை மார்க்ஸியம் லெனினியத்தின் அனைத்தும் தழுவிய உண்மையை படிப்பதை எடுத்துக்கொள்வோம். பல தோழர்கள் மார்க்ஸிய லெனினியத்தை புரட்சிகர நடைமுறை தேவைகளை பூர்த்தி செய்வதற்காகப் படிப்பதில்லை. ஆனால் வெறும் படிப்புக்காக மட்டுமே படிக்கிறார்கள். இதன் விளைவாக அவர்கள் புத்தகத்தைப் படித்த போதிலும் அதை அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை. மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோரிடமிருந்து மேற்கோள்களை மனம்போனபோக்கில் ஒருதலைப்பட்சமாக எடுத்துக்காட்டுவதற்கு மட்டும்தான் அவர்களால் முடியும். ஆனால் மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோரின் நிலைப்பாடு, நோக்கு நிலைமுறை ஆகியவற்றை பயன்படுத்தி சீனத்தின் இன்றைய நிலைமைகளையும், அதன் வரலாற்றையும் உருப்படியாக கற்பதற்கோ, அல்லது சீனப் புரட்சியின் பிரச்சினைகளை உருப்படியாக ஆராய்ந்து தீர்வு காண்பதற்கோ அவர்களால் முடிவதில்லை. மார்க்ஸிய — லெனினியத்தை இப்படி அணுகுவது பெரும் தீமையை விளைவிக்கிறது.

குறிப்பாக மேல்தட்டு, இடைத்தட்டு ஊழியர்களிடையே இப்படிப்பட்ட அணுகல் முறை ஊறு விளைவிப்பதாக உள்ளது.

நான் இங்குக் குறிப்பிட்டுள்ள மூன்று அம்சங்களும், அதாவது நடப்பு நிலைமைகளைப் படிப்பதை புறக்கணிப்பது, வரலாற்றைப் படிப்பதைப் புறக்கணிப்பது, மார்க்ஸிய — லெனினியத்தைப் படிப்பதை புறக்கணிப்பது இவை எல்லாம் மிக, மிக மோசமான வேலை

www.padippakam.com

நடையில் சேர்ந்தவையாகும். இந்த நடை பரவுவது நமது தோழர்கள் பலருக்குத் தீமைகளை விளைவிக்கிறது.

நமது அணியில் பல தோழர்கள் நமது வேலை நடையின் மூலம் உண்மையிலேயே தவறான வழிக்கு இட்டுச் செல்லப்பட்டிருக்கிறார்கள். இந்த வேலை நடையை பின்பற்றுபவர்கள் நாடு, மாகாணம், மாநிலம் அல்லது மாவட்டம் இவற்றின் உள்ளேயும் வெளியேயும் நிலவும் தனிப்பட்ட நிலைமைகளை முறையாகவும், முற்றாகவும் பரிசீலனை செய்து படிப்பதற்கு விருப்பமின்றி தங்களுடைய சொற்ப அறிவின் அடிப்படையில் உத்தரவுகளை பிறப்பிப்பது. இது எனக்கு இப்படித்தான் தோன்றுகிறது; எனவே இது இப்படித்தான் இருந்தாக வேண்டும் என்றவாறு நடந்து கொள்கின்றார்கள். இந்த அகநிலை வேலைநடை நமது தோழர்கள் மிகப் பலர் மத்தியில் இன்னும் இல்லாமலா போய்விட்டது?

நமது சொந்த வரலாற்றை அறியாமல் இருப்பதற்கு அல்லது மிகக் குறைவாகவே அறிந்து கொண்டிருப்பதற்கு வெட்கப்படுவதற்கு பதில் கர்வம் கொள்கிறார்கள். குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றையும் அபினி யுத்தம் முதல் நூறாண்டு கால சீனத்தின் வரலாற்றையும் அறிந்துள்ளவர்கள் மிகச்சிலர்தான். கடந்த நூறு வருடங்களின் பொருளாதார அரசியல் இராணுவ விஷயங்களை எவருமே கவனமாகவே படிப்பதற்கு எடுத்துக் கொள்ளவில்லை. நமது சொந்த நாட்டைப்பற்றி கொஞ்சங்கூட அறியாத சிலருக்கு புராதன கிரேக்க நாட்டைப்பற்றியும், மற்ற வெளிநாடுகளைப் பற்றியும் மட்டும்தான் விவரிக்க முடிகிறது. இந்த அறிவும் கூட பழைய வெளிநாட்டுப் புத்தகங்களில் கிடைத்த சச்சரவும், முடிவும் அடங்கிய மிகவும் பரிதாபத்திற்குரிய அறிவுதான்.

படிப்பதற்காக வெளிநாடு சென்று திரும்பிய மாணவர்கள் பலர் பத்தாண்டு கணக்கில் இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். ஐரோப்பாவிலிருந்தோ, அமெரிக்காவிலிருந்தோ, ஜப்பானிலிருந்தோ தாயகம் திரும்பிய இவர்களால் வெளிநாட்டு விஷயங்களை கிளிப்பிள்ளை போல் சொல்ல மட்டும் தான் முடிகிறது.

அவர்கள் கிராமபோன் பெட்டியாகமாறி புதியவற்றை அறிந்து படைக்கவேண்டிய தங்கள் கடமையை மறந்துவிடுகிறார்கள். இந்த நோய் கம்யூனிஸ்ட் கட்சியிலும் தொற்றிக் கொண்டிருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

நாம் மார்க்ஸியத்தை படித்துக் கொண்டிருந்த போதிலும் நம்மில் பலர் படிக்கும் வழிமுறை மார்க்ஸீயத்துக்கு நேர் விரோதமாக செல்கிறது. எப்படி என்றால், மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின் ஸ்டாலின் ஆகியோர் மனப்பூர்வமாக நமக்கு ஆணையிட்ட அடிப்படை கோட்பாட்டை—தத்துவத்துக்கும், நடைமுறைக்கும் உள்ள ஒற்றுமையை — அவர்கள் மீறுகிறார்கள். இந்த கோட்பாட்டை மீறி விட்டு அவர்கள் இதற்கெதிரானதொரு கோட்பாட்டை சொந்தமாக கண்டுபிடித்திருக்கிறார்கள், நடைமுறையிலிருந்து தத்துவத்தைப் பிரிப்பது என்பதுதான் அது. பள்ளியிலும், வேலையிலுமுள்ள ஊழியர்களுக்கு சித்தாந்தத்தை போதிக்கும் ஆசிரியர்கள் சீன புரட்சியின் தர்க்கத்தைப் படிப்பதற்கு மாணவர்களுக்கு வழி காட்டுவதில்லை; பொருளாதார ஆசிரியர்கள் சீனப் பொருளாதார இயல்புகளை படிப்பதற்கு அவர்களுக்கு வழி காட்டுவதில்லை. அரசியல் விஞ்ஞானத்தின் ஆசிரியர்கள் சீனப் புரட்சியின் போர்த்தந்திரத்தைப் படிப்பதற்கு அவர்களுக்கு வழி காட்டுவதில்லை. இராணுவ விஞ்ஞானத்தின் ஆசிரியர்கள் சீனாவின் விசேஷ தன்மைக்கு பொருத்தமான யுத்த தந்திரம், போர்த்தந்திரம் பற்றி படிப்பதற்கு அவர்களுக்கு வழி காட்டுவதில்லை. அதேபோல்தான் இன்னும் பலவும்; இதன் விளைவாக மக்களுக்கு பெரும் தீமை விளைவிக்கும் அளவுக்கு தவறுகள் பரப்பப்படுகிறது. ஒருவர் தான் ஏனானில் கற்றுக் கொண்டதை பூசியனில் எப்படி பயன்படுத்துவது என்பது அவருக்குத் தெரியவில்லை.

பொருளாதார பேராசிரியர்களால் எல்லைப்புற நாணயத்துக்கும் (புரட்சிகர அரசாங்கத்தின் நாணயம்) கோமின்டாங் கட்சி நாணயத்துக்கும் இடையிலான உறவைச் சொல்லி விளக்க முடியவில்லை. எனவே இயல்பாகவே மாணவர்களாலும் விளக்க முடியாது. இதனால் பலரிடம் ஒரு வக்கிரமான மனோபாவம் உருவாகி இருக்கிறது; சீனத்தின் பிரச்சனையில் அக்கறை காட்டி கட்சியின் உத்தரவுகளை கவனமாக எடுத்துக் கொள்வதற்கு பதிலாக அவர்கள் தமது ஆசிரியர்களிடமிருந்து கற்றுக் கொண்ட முற்றானதும், நிலையானதும், தம்பட்டம் அடிக்கும் வரட்டுச் சூத்திரங்களுக்கு தங்கள் முழு மனதையும் பறி கொடுத்து விடுகிறார்கள். இருப்பினும் நான் இங்கு கூறியிருப்பவை நமது கட்சியிலுள்ள மிக மோசமான வகைகளைக் குறிப்பதாகும். இதுதான் பொதுவான நிலை என்று நான் கூறவில்லை. இருந்தபோதிலும் இந்த வகையான ஆட்கள் இருக்கவே செய்கிறார்கள். மேலும் கூறுவதென்றால் அவர்கள மிகச் சிலரே. ஆனால், அவர்கள்



படிப்பகம்

www.padippakam.com

பெருந் தீமையை விளைவிக்கிறார்கள். இந்த விஷயத்தை நாம் லேசாக எடுத்து கொண்டு விடக்கூடாது.

இந்த கருத்தை மேலும் விளக்குவதற்கு இரண்டு எதிர், எதிரான அணுகு முறைகளை வேறுபடுத்திக்காட்ட விரும்புகிறேன்.

முதலாவது அக நிலையான அணுகு முறை. இந்த அக நிலையான அணுகு முறையோடு ஒருவர் சூழ்நிலையை முறையாகவும் முற்றாகவும் ஆய்வு செய்வதில்லை. ஆனால் வெறும் மான சீகமான உற்சாகத்தோடு மட்டும் வேலை செய்கிறார். இன்றைய சீனத்தின் முகத்தோற்றத்தின் ஒரு தெளிவற்ற சித்திரம்தான் இவரிடம் இருக்கிறது. இந்த அணுகு முறையோடு இவர் வரலாற்றைச் சிதைக்கிறார். இவருக்கும் புராதன கிரேக்க நாட்டைதான் தெரியும். ஆனால் சீனத்தைத் தெரியாது. நேற்றைய சீனத்தை பற்றியும் அதற்கு முந்தைய சீனத்தை பற்றியும் மேலோட்டமாகவே தெரிந்து கொண்டிருக்கிறார். இத்தகைய அணுகுமுறையோடு ஒருவர் மார்க்ஸிய லெனினியத் தத்துவத்தை மேலோட்டமாக இலக்கு ஏதுமில்லாமல் படிக்கிறார். அவர் மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோரிடம் செல்கிறார். அவர்களுடைய நிலையையும், நோக்கு நிலையையும் முறையையும் தேடி அடைந்து அதைக் கொண்டு சீன புரட்சியின் தத்துவார்த்தப் பிரச்னைகளையும் செயல் தந்திர பிரச்னைகளையும் தீர்ப்பதற்காக அல்ல. மாறாக தத்துவத்தை வெறும் தத்துவத்திற்காகவே படிக்கிறார். அவர் அம்பை இலக்கை நோக்கி எய்வதில்லை. ஆனால் மனம் போன போக்கில் எய்கிறார். புறநிலையான எதார்த்தங்களிலிருந்து தொடங்கி அதிலிருந்து விதிகளைப் பெற்றுத் தமது செயலுக்கு வழிகாட்டியாக பயன்படுத்த வேண்டுமென்று மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோர் நமக்கு போதிக்கிறார்கள். இந்த விதிகளை பெறுவதற்காக — மார்க்ஸ் கூறியிருப்பதைப் போன்று —விவரப் பொருள்களை விரிவாக உபயோகித்து அவற்றை அறிவியல் ரீதியான பகுப்பாய்விற்கும், தொகுப்பிற்கும் உட்படுத்த வேண்டும்.

நமது தோழர்கள் பலர் இந்த வழியில் செயல்படுவதில்லை, இதற்கு எதிராக செய்கிறார்கள் இதில் ஒரு கணிசமான பகுதியினர் ஆராய்ச்சி வேலையில் ஈடுபட்டிருக்கின்றனர். ஆனால் இன்றைய சீனத்தையோ, முந்தைய சீனத்தையோ பற்றிபடிப்பதில்லை. அவர்களுக்கு அக்கரை இல்லை. அவர்களுடைய அக்



படிப்பகம்

களை எல்லாம் எதார்த்தத்திலிருந்து விலகிய வெற்று தத்துவங் களைப் படிப்பதிலேயே உள்ளடங்கி இருக்கிறது. மற்றும் பலர் நடைமுறை வேலை செய்கிறார்கள். ஆனால் அவர்களும் எதார்த்த நிலைமைகளை பற்றி படிப்பதில் கவனம் செலுத்துவதில்லை. அடிக் கடி அவர்கள் வெறும் உற்சாகத்தை மட்டும் சார்ந்திருந்து, கொள் கைகளுக்குப் பதில் தமது சொந்த உணர்ச்சிகளை வைக்கிறார் கள். இவ்விரு வகையானவர்களும் அகநிலையை சார்ந்து புற நிலை எதார்த்தங்கள் இருப்பதை புறக்கணிக்கிறார்கள். இவர் கள் உரை நிகழ்த்தும் போது அ, ஆ, இ, 1, 2, 3, என்ற நீண்ட தலைப் புகளில் தங்களது உரைகளை நிகழ்த்துவதில் இறங்கி விடுகிறார் கள் கட்டுரைகளை எழுதும் போது அவர்கள் ஏராளமான வார்த்தை ஜாலங்களைக் கொட்டுகிறார்கள் எதார்த்த விவரங்களிலிருந்து உண் மையை தேடும் நோக்கம் அவர்களிடம் இல்லை. ஆனால் பகட் டான வார்த்தை ஜாலங்களால் தனக்கு அனுகூலத்தைப் பெற வேண்டும் என்ற விருப்பம் மட்டும் இருக்கிறது. அவர்கள் உறுதி யற்றவர்கள். உடைந்து போகக் கூடியவர்கள். அவர்கள் எப்பொ ழுதும் சரியானவர்கள் இல்லை வானத்திற்கு கீழே அதிகாரம் படைத்த முதல் நபர்கள் அவர்கள் தான். எல்லா இடங்களுக்கும் விரைந்தோடும் "பேரரசின் பிரதிநிதிகள்" அவர்கள். நமது அணி யிலுள்ள சில தோழர்களின் வேலை நடை இத்தகையது தான்.

ஒருவருடைய சொந்த நடத்தையை இத்தகைய வேலை நடை யினால் ஆள்வது அவருக்கே தீமையை தருவதாகும். இதையே மற்றவர்களுக்கும் போதிப்பது தீமை விளைவிப்பதாகும். புரட்சியை வழிநடத்த இதை பயன்படுத்துவதும் புரட்சிக்கே தீமை விளைவிப் பதாகும். தொகுத்துக் கூறினால் அறிவியலுக்கும், மார்க்ஸிய லெனினியத்திற்கும் முரணான இந்த அகநிலை வழியானது கம்யூ னிஸ்ட் கட்சிக்கும், தொழிலாளி வர்க்கத்திற்கும், நாட்டிற்கும் பயங்கரமான விரோதியாகும். கட்சி உணர்வில் தூய்மையற்ற போக்கின் வெளிப்பாடுதான் இது. ஒரு பயங்கரமான விரோதி நம்முன் நிற்கிறான். நாம் அவனை வீழ்த்த வேண்டும். அகநிலைப் போக்கை வீழ்த்தினால்தான், மார்க்ஸிய — லெனினியத்தின் உண்மை பரவும், நமது கட்சி உணர்வு வலுப்படுத்தப்படும். புரட்சி வெற்றி அடையமுடியும். ஒரு அறிவியல் ரீதியான அணுகுமுறை இன்றி அதாவது தத்துவத்தையும், நடைமுறையையும் ஒன்று சேர்க்கும் மார்க்ஸிய—லெனினிய பார்வை இன்றி இருப்பது என்பதற்கு கட்சி உணர்வில்லாமல் இருப்பது அல்லது கட்சி உணர்வு குறைவாக இருப்பது என்றுதான் பொருள். இதை

www.padippakam.com

நாம் வலியுறுத்தியாக வேண்டும். இத்தகைய நபர்களை சித்தரிக்கின்ற கவிதை ஒன்று உண்டு. அது வருமாறு:-

சுவற்றிலே வளரும் நாணல்
தலைகனத்து தண்டு மெலிந்து
ஊன்றாத வேர்முடைய்து
குன்றுகளின் மேல் பாயும்மூங்கில்—
முனை கூர்ந்து தோல்கனத்து
உள்ளூர ஒட்டையும் உடையது

ஒரு அறிவியல் ரீதியான அணுகுமுறை இல்லாதவர்களையும், மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோரின் கட்டுரைகளில் இருந்து வெறும் வார்த்தைகளையும் வாசகங்களையும் எடுத்துக் கூறமட்டும்தான் முடியும் என்றிருப்பவர்களையும் எதையும் உண்மையாக கற்றறிவதன் கட்டாயதேவை இல்லாமலேயே புகழ்பெற்று சுவைப்பவர்களையும் மிகப்பொருத்தமாக இந்த கவிதை விளக்கவில்லையா? தனது நோயை தானே குணப்படுத்திக் கொள்ள யாராவது உண்மையிலேயே விரும்பினால் இந்த கவிதையை நினைவில் பதிய வைத்துக் கொள்ளட்டும். அல்லது இன்னும் அதிக துணிச்சலைக் காட்டி இதை அவரது அறையில் ஒட்டி வைத்துக் கொள்ளட்டும் என்று நான் அவருக்கு அறிவுரை கூறுவேன்.

மார்க்ஸியம்—லெனினியம் என்பது விஞ்ஞானம். விஞ்ஞானம் என்றால், நேர்மையான, உறுதியான அறிவு என்று பொருள். அதில் ஏமாற்று வித்தைகளுக்கு இடமில்லை. எனவே நாமும் நேர்மையாகவே இருப்போம்.

இரண்டாவதுமார்க்ஸிய—லெனினிய அணுகுமுறை:- இந்த அணுகுமுறையோடு, ஒருவர் சூழ்ந்துள்ள நிலைமைகளை முறையாகவும், முற்றாகவும் பரிசீலித்துப் படிப்பதற்கு மார்க்ஸிய—லெனினிய தத்துவத்தையும் வழிமுறையையும் பயன்படுத்துகிறார் அவர் வெறும் உற்சாகத்தின் மூலம்மட்டும், வேலை செய்வதில்லை. ஆனால் ஸ்டாலின் கூறுவதுபோல் புரட்சிகர வீச்சை நடைமுறைப் படுத்தும் உணர்வோடு அவர் இணைக்கிறார். இந்த அணுகுமுறையோடு அவர் வரலாற்றை சிந்திக்கமாட்டார். புராதன கிரேக்க நாட்டை தெரிந்து கொண்டால் மட்டும் போதாது; அவ



படிப்பகம்

www.padippakam.com

ருக்கு சீனத்தைத் தெரிந்து கொள்ளவும் வேண்டும். அவர் வெளி நாடுகளின் புரட்சிகர வரலாற்றை தெரிந்து கொள்ள வேண்டும் என்பது மட்டுமன்றி சீனத்தின் புரட்சிகர வரலாற்றையும் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த அணுகுமுறையோடு ஒருவர் மார்க்ஸிய-லெனினியத்தை ஒரு நோக்கத்தோடு படிக்கிறார். அதாவது, மார்க்ஸிய-லெனினிய தத்துவத்தை சீன புரட்சியின் இயக்கத்தோடு ஒன்றிணைத்து இந்த தத்துவத்திலிருந்து சீன புரட்சியின் தத்துவப் பிரச்சனைகளையும், தந்திரோபாய பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கான நிலை நோக்கு, நிலைமுறை ஆகியவற்றை படிக்கிறார். இத்தகைய அணுகுமுறை என்பது இலக்கை நோக்கி அம்பை எய்வதாகும். இலக்கு என்பது சீனபுரட்சி. அம்பு என்பது மார்க்ஸியம்-லெனினியம். சீன கம்யூனிஸ்டுகளாகிய நாம் இந்த அம்பை தேடிக் கொண்டிருக்கிறோம். ஏன் என்றால் நாம் சீன புரட்சி இயக்கத்தின் இலக்கை தாக்க விரும்புகிறோம். இத்தகைய மனோபாவம் என்பது எதார்த்த விபரங்களிலிருந்து உண்மையை தேடுவது ஆகும். புறநிலையாய் உள்ள எல்லா விஷயங்களும் "எதார்த்த விபரங்கள்" என்பதாகும்.

'உண்மை' என்றால் அவற்றின் உள் உறவுகள், அதாவது, அவற்றை நிர்வகிக்கும் விதிகள். 'தேடுவது, என்றால் ஆராய்வது என்று அர்த்தமாகும். நாடு, மாகாணம், மாவட்டம், பிரதேசம் இவற்றின் உள்ளும் புறமும் உள்ள உண்மையான நிலைமைகளிலிருந்து நாம் தொடங்கி அவற்றிலிருந்து நமது செயலுக்கு வழி காட்டியாக அமையும் விதிகளை நாம் வகுத்துக் கொள்ளவேண்டும். அவ்விதிகள் கற்பனையில் தோன்றுதவையாக அவற்றில் இயற்கையாய் புதைந்துள்ளதாக இருக்கவேண்டும்.

அதாவது நம்மை சுற்றி நடைபெறும் சம்பவங்களின் அக உறவுகளை நாம் கண்டறிய வேண்டும். இதை செய்வதற்கு நாம் மானசீகமான கற்பனை, 'கணப் பொழுதில் தோன்றி மறையும் உற்சாகம், உயிரற்ற நூல்கள் ஆகியவற்றை சார்ந்திருக்க கூடாது. மாறாக புறநிலையிலுள்ள எதார்த்த விவரங்களை சார்ந்திருக்க வேண்டும். ஆதாரங்களை விவரங்களை சார்ந்திருக்க வேண்டும். ஆதாரங்களை விவரமாக தொகுத்து பொதுவான மார்க்சிய-லெனினியக் கோட்பாடுகளின் வழி காட்டுதலின்கீழ் அவற்றிலிருந்து சரியான முடிவுகளை எடுக்க வேண்டும். இத்தகைய முடிவுகள் அ, ஆ, இ, ஈ, வரிசையில் முறைப்படுத்திய நிகழ்வுகளின் பட்டியலாக இராது. அல்லது பக்தி நெறிகளை எழுதி நிரப்புவதாக



படிப்பகம்

www.padippakam.com

இராது. ஆனால் அவை விஞ்ஞான ரீதியான முடிவுகளாகும். இத்தகைய மனோபாவம் சான்றுகளிலிருந்து உண்மையை தேடும் ஒரு அணுகு முறையாகும். பகட்டான வார்த்தை ஜாலங்கள் மூலம் அனுகூலமானதைப் பெறுவதல்ல. இதுதான் கட்சி உணர்வின் தத்துவத்தையும் நடைமுறையையும் ஒன்றுபடுத்தும் மார்க்சியலெனினிய வேலை நடையின் வெளிப்பாடு. கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் மிகவும் குறைந்தபட்சமாவதுஇருக்க வேண்டிய அணுகுமுறை இதுவே. இந்த அணுகுமுறையை எவரும் தலை கனத்த தண்டு மெலிந்த ஊன்ருதவோ ஆகவோ அல்லது முனை கூர்ந்து தோல் தடித்த உள்ளீற் ஒட்டையாகவோ இருக்க மாட்டார்கள்.

மேற்கூறிய திட்டங்களின்படி நான் கீழ்வரும் திட்டங்களை முன் வைக்கிறேன்.

(a) நம்மை சுற்றியுள்ள சூழ் நிலையை முழுமையாகவும் முறையாகவும் படிக்கும் கடமையை நாம் முழுக் கட்சியின் முன் னால் வைக்க வேண்டும். மார்க்சியலெனினிய தத்துவம் வழிமுறை ஆகியவற்றின் அடிப்படையில் நமது விரோதிகள், நமது நண்பர்கள் நமது தரப்பு ஆகியோரின் பொருளாதாரம், நிதி, அரசியல், இராணுவம், கலாச்சாரம், கட்சி நடவடிக்கைகள் முதலிய துறைகளின் வளர்ச்சியைப் பற்றி நாம் விவரமாக பரிசீலித்து, படித்த பின்பு முறையான அவசியமான முடிவுகளை வகுத்துக் கொள்ள வேண்டும். இந்த நோக்கத்திற்காக நடைமுறைப் படுத்த வேண்டிய விஷயங்களை பரிசீலிப்பதிலும் நம்முடைய தோழர்களை நாம் கவனம் செலுத்த செய்ய வேண்டும். கம்யூனிஸ்ட்கட்சி தலைமை அமைப்புகளின் அடிப்படை கடமையின் இரட்டைப்பகுதிகள்: நிலைமைகளை அறிந்துகொள்வது. கொள்கையை திறமையாக பயன் படுத்துவது. முன்னது உலகை அறிந்துகொள்வது அடுத்தது கொள்கையை திறமையாக பயன்படுத்துவது. இந்த நமது தோழர்கள் புரிந்து கொள்ளச்செய்யவேண்டும். பரிசீலனை இல்லாமல் பேச உரிமையில்லை. டம்பமான பிதற்றல்கள் 1,2,3,4, என்ற வரிசைப்படுத்திய வெறும் நிகழ்வு எல்லாம் எந்த பயனையும் தராது. என்பதை நமது தோழர்கள் உணரச் செய்ய வேண்டும். உதாரணத்திற்கு பிரச்சார வேலையை எடுத்துக் கொள்வோம். நமது எதிரிகளின் பிரச்சார வேலைய எடுத்துக்கொள்வோம். நமது எதிரிகளின் பிரச்சாரம் நமது பிரச்சாரம் இவை பற்றிய நிலைமைகள் என்னவென்று நாம் அறியாமல்



படிப்பகம்

www.padippakam.com

இருந்தால் ஒரு சரியான பிரச்சாரக் கொள்கையை முடிவு செய்ய நம்மால் முடியாது. எந்த துறையின் வேலையாக இருந்தாலும் முதலில் நிலைமைகளை தெரிந்து கொள்ள வேண்டும். பிறகு தான் வேலையைச் சிறப்பாகச் செய்ய முடியும். கட்சியின் [illegible] நடையை மாற்றுவதில் அடிப்படையான [illegible] படிப்புக்குமான திட்டத்தை கட்சி முழுவதிலும் நிறைவேற்றுவதாகும்.

(b) கடந்த நூற்றாண்டுகளின் சீனாவின் வரலாற்றை பொறுத்தவரையில் நாம் தகுதி வாய்ந்தவர்களை ஒன்று கூட்டி இணைத்தும் முறையான வேலைப் பிரிவினையுடனும் அதை கற்கச் செய்வதன் மூலம் இன்றைய ஒழுங்கற்ற நிலைமைகளை வெற்றி கொள்ள வேண்டும். முதலில் பொருளாதார வரலாறு, அரசியல் வரலாறு, இராணுவ வரலாறு, கலாச்சார வரலாறு ஆகிய பல்வேறு துறைகளை பகுத்தாராய்ந்து கற்பது அவசியம். இதற்குப் பிறகுதான் முறைப்படுத்தி தொகுத்து கற்பது சாத்தியமாகும்.

(c) ஊழியர்களின் கல்வியைப் பொறுத்தவரை வேலையிலும் சரி ஊழியர்களுடன் பாடசாலைகளிலாயினும் சரி சீனப்புரட்சியின் நடைமுறைப் பிரச்சினைகளை ஆராய்வதை மையமாகக் கொண்டு மார்க்சிய லெனினியத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை வழிகாட்டியாகப் பயன்படுத்தும் கொள்கை ஒன்று நிலைநாட்டப்பட வேண்டும்.

இது சிறந்ததோர் சேர்க்கையாகவும் நூறாண்டு கால உலக கம்யூனிஸ இயக்கத்தின் தொகுப்புரையாகவும் தத்துவத்தையும் நடைமுறையையும் ஒன்றிணைப்பதின் முன்மாதிரியும் ஆகும். இதுவரையில் உலகத்தில் வந்துள்ள புத்தகங்களிலேயே இது ஒன்றுதான் சிறந்ததும், விரிவானதுமான முன் மாதிரியாக இருக்கின்றது. எப்படி லெனினும், ஸ்டாலினும் மார்க்சியத்தின் அனைத்தும் தழுவிய உண்மையை சோவியத் புரட்சியின் ஸ்தூலமான நடைமுறையோடு ஒன்றிணைத்தார்கள்; அதன் மூலமாக மார்க்சியத்தை வளர்த்தார்கள் என்பதை பார்க்கும் போது சீனாவில் எவ்வாறு வேலை செய்ய வேண்டும் என்பதை நாம் அறிந்து கொள்கிறோம்.

நாம் பல தவறான வழிகளில் சுற்றி வந்திருக்கிறோம். ஆனால் தவறுகள் என்பது அனேகமாக சரியானது எது என்பதன் முன்னறிவிப்பாளனாகவே இருக்கிறது. மிகத் தீவிரமான உயிர்த் துடிப்போடும், மிகச்செறிப்போடும் பல்வகைப்பட்டும் சீனப்புரட்சியானது நடக்கும் தருணத்தில் நமது படிப்பை சரி செய்வது சிறப்பான பலனை நிச்சயம் தரும் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு. ★



படிப்பகம்

www.padippakam.com

# தலைமையின் வழிமுறை பற்றிய சில பிரச்சனைகள்

☐ மா சே துங்

1. கம்யூனிஸ்ட்களாகிய நாம், எந்த வேலையைச் செய்தா லும் அதில் கையாள்வதற்கு இரண்டு முறைகள் உள்ளன. ஒன்று பொதுவானதைக் குறிப்பிட்ட ஒன்றோடு பொருத்துவதாகும்; மற் றொன்று தலைமையை மக்களோடு இணைப்பதாகும்.

2. எந்தப் பணியிலும், பொதுவான, பரவலான அறை கூவல் விடப்படா விட்டால், பரந்துபட்ட மக்களை செயலுக்கு ஒன்று திரட்ட முடியாது. ஆனால் தலைமை இடத்தில் உள்ள நபர்கள் ஒரு பொதுவான அறை கூவலுடன் மட்டும் தங்களைக் குறுக்கிக் கொண்டால்— அவர்கள் தாங்களே நேரடியாக, சில அமைப்புகளில், அறை கூவல் விடப்பட்ட பணியில் ஆழமாகவும், குறிப்பாகவும்சென்று, சில குறிப்பிட்ட புள்ளியில் ஒருசாதனையை ஏற்படுத்தி, அனுபவத்தைப்பெற்று, அந்த அநுபவத்தைப் பிற குழுக்களை வழி நடத்துவதற்குப் பயன்படுத்தாவிட்டால் — அப் போது அவர்களால் தங்களுடைய பொதுவான அறை கூவலின் சரியான தன்மையைச் சோதிக்கவோ அல்லது அதன் உள்ளடக் கத்தை வளர்த்தெடுக்கவோ அவர்களுக்கு வேறு வழியில்லை; அதிலிருந்து ஒன்றும் கிடைக்காமல் போகக்கூடிய அபாயம்உள்ளது. 1942-ம் ஆண்டு சீர் செய் இயக்கத்தில் (Rectification movement) எடுத்துக் காட்டாக, பொதுவான அறை கூவலை குறிப்பான துடன் இணைக்கும் வழிமுறையும் குறிப்பான வழிகாட்டு தலும் பயன் படுத்தப்பட்ட இடங்களில் சாதனைகள் ஏற் பட்டன; இந்த வழிமுறை பயன்படுத்தப்படாத இடங்களில் சாதனை களே இல்லை. 1943-ம் ஆண்டு சீர் செய் இயக்கத்தில், மத்தியக் கமிட்டியின் ஒவ்வொருபிரிவும், துணைப்பிரிவும், ஒவ்வொரு பிர தேசத்தின் கட்சிக் குழுவும் கட்சிச் செயல் குழுவும் ஒரு பொதுவான அறை கூவலைவிட்டதுடன் (ஆண்டு முழுமைக்குமான ஒரு சீர்செய் இயக்கத்திட்டம்) செயல் இயக்கத்தில் அனுபவங்களைப் பெற்றுக் கொண்டு, கீழ்க்கண்டவைகளைச் செய்யவேண்டும். அமைப்புக்குள் இருந்தும், மற்றும் அருகிலுள்ள பிறஅமைப்புகள் பள்ளிகள் அல்



படிப்பகம்

www.padippakam.com

லது ராணுவக்குழுக்கள் ஆகியவற்றில் இருந்தும் இரண்டு அல்லது மூன்று குழுக்களை (மிகப் பலக் குழுக்கள் கூடாது) தேர்ந்தெடுங்கள், அந்தக் குழுக்களைப் பற்றி ஒரு முழுமையான ஆய்வை நடத்துங்கள்; அவைகளில் சீர்செய் இயக்கத்தின் வளர்ச்சி பற்றிய ஒரு விரிவான அறிவையும் அவைகளில் உள்ளவர்களின் சில பிரதிநிதிகளுடைய (அநேக பேர் அல்ல) அரசியல் வரலாறு, தத்து வார்த்த அறிவு, ஆய்வில் உள்ள ஆர்வம், வேலையில் அவர்களுடைய பலமான, பலவீனமான அம்சங்கள் ஆகியவற்றைப் பற்றி ஒரு விரிவான அறிவையும் பெறுங்கள். மேலும் அந்தக் குழுக்கள் எதிர்நோக்குகின்ற நடைமுறைப் பிரச்சனைகளுக்கு குறிப்பான தீர்வுகள் காண்பதற்கு அவற்றின் பொறுப்பில் உள்ளவர்களுக்கு தனிப்பட்ட நேரடி வழிகாட்டுதலை (Personal guidance) அளிக்கவும். ஒவ்வொரு அமைப்பும் பள்ளியும் அல்லது ராணுவகுழுவும் ஏராளமான கீழ் மட்டக் குழுக்களைப் பெற்றிருப்பதால், அவற்றின் தலைவர்கள் அதே போல் செய்ய வேண்டும். மேலும் இந்த வழி முறையைக் கொண்டுதான் தலைவர்கள் தலைமை தாங்குதல், கற்றுக்கொள்ளுதல் ஆகிய இரண்டையும் ஒன்றிணைக்கிறார்கள். தலைமை இடத்தில் உள்ள எவரும் குறிப்பிட்ட நபர்களிடம் இருந்தும் குறிப்பிட்ட கீழ்மட்டக் குழுக்களின் நிகழ்ச்சிகளில் இருந்தும் குறிப்பான அநுபவங்களை பெறாமல் இருந்தால் அவருக்கு எல்லாக் குழுக்களுக்கும் பொதுவான வழிகாட்டுதலை அளிப்பதற்கு தகுதியில்லை. எல்லா மட்டங்களிலும் உள்ள முன்னணி ஊழியர்கள் செயல்படுத்தப் பழகும் வகையில் இந்த வழிமுறை எல்லா இடங்களிலும் வளர்க்கப்படவேண்டும்.

3. இயக்கத்தின் போது மிகக்குறைந்த எண்ணிக்கையில் செயல்வீரர்களையும், குறிப்பிட்ட குழுக்களின் தலைவர்களையும் கொண்ட ஒன்றை, மையமாகக்கொண்ட ஒரு தலைமைக் குழு உருவாக்கப்படுதலும், இந்தத் தலைமைக்குழு தன்னை இந்த இயக்கத்தில் பங்கெடுக்கின்ற பரந்துபட்ட மக்களிடையே நெருக்கமாகப் பிணைத்துக் கொள்வதும் சீர்செய் இயக்கத்தின் வெற்றிக்கு அவசியமானது என்பதை 1942-ம் ஆண்டு சீர் செய்யும் இயக்கமும் நிரூபிக்கிறது. தலைமைக் குழு எவ்வளவுதான் தீவிரமாக இருந்தாலும், அதனுடைய நடவடிக்கை பரந்துபட்ட மக்களின் நடவடிக்கையுடன் ஒன்றிணைக்கப் படவில்லையென்றால் அந்த நடவடிக்கை ஒரு சில குறிப்பிட்ட நபர்களின் பயனற்ற முயற்சியாகவே அமையும். அதே சமயத்தில், பரந்துபட்ட மக்களின் நடவடிக்கையை முறையாக ஒன்றுதிரட்ட ஒரு சக்திவாய்ந்த தலைமைக்



படிப்பகம்

www.padippakam.com

குழு இல்லையென்றால் அந்த நடவடிக்கை நீண்ட காலத்திற்கு நீடிக்கபடவோ அல்லது சரியான திசையில் முன் கொண்டு செல்லப்படவோ அல்லது ஒரு உயர்ந்த நிலைக்கு உயர்த்தப்படவோ முடியாது. எந்த இடத்திலும் மக்கள் பொதுவாக ஒப்பு நோக்குகையில் தீவிரமானது, இடைப்பட்டது, பின் தங்கியது என்ற மூன்று பிரிவுகளை உடையதாக இருக்கின்றனர். எனவே குறைவான எண்ணிக்கையில் உள்ள தீவிரமுள்ள நபர்களை தலைமையைச் சுற்றி ஒன்று படுத்துவதில் திறமையுள்ளவர்களாக தலைவர்கள் இருக்க வேண்டும்; இடைப்பட்ட நபர்களின் நிலைமையை உயர்த்தவும், பின் தங்கிய நபர்களை வென்றெடுக்கவும் தலைவர்கள் அவர்களைச் சார்ந்திருக்க வேண்டும். பரந்துபட்ட மக்களுடன் உண்மையிலேயே ஒன்றுபட்ட, உறவுகொண்ட ஒரு தலைமைக்குழு பரந்து பட்ட மக்கள் போராட்டத்தின் இயக்கத்தில்தான் படிப்படியாக உருவாக முடியுமேஒழிய, அதிலிருந்து தனிமைப்பட்டு உருவாக முடியாது. ஒரு பெரிய போராட்டத்தின் இயக்கத்தில் அனேகவற்றில் தலைமைக் குழுவின் அமைப்பு, முதல், இடை, கடைக்கால் கட்டங்கள் முழுவதும் மொத்தத்தில் மாறாமல் அப்படியே இருக்கக் கூடாது; இருக்க முடியாது; ஒப்பு நோக்குகையில் தாழ்ந்த அல்லது பின் நோக்கிச் சென்றிருக்கிற தலைமைக் குழுவில் ஏற்கனவே இருக்கிற நபர்களை அகற்றுவதற்கு, போராட்டத்தின் போது முன் வருகின்ற தீவிர செயல் வீரர்கள் தொடர்ந்து பதவி உயர்த்தப்பட வேண்டும். அநேக இடங்களில் அநேக அமைப்புகளில் வேலைகள் முன் நோக்கி தள்ளப்படாமல் இருப்பதற்கு ஒரு அடிப்படைக் காரணம் பரந்துபட்ட மக்களுடன் ஒன்றுபட்டதும் உறவு கொண்டதும் தொடர்ந்து நன்முறையில் தன்னை வைத்துக் கொள்ளக் கூடியதுமான ஒரு தலைமைக்குழு இல்லாததேயாகும். உண்மையான நிலைமைகளுக்கு ஏற்ற வகையில் உருவாக்கப்பட்ட (செயற்கையாக மொத்தத்தில் தூக்கியெறியாமல்) மிகத் தீவிரமான, நேர்மையான, கவனமிக்க ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் மாணவர்களை உள்ளடக்கியதான பல நபர்களை அல்லது ஒரு டஜன் அல்லது கொஞ்சம் அதிகமான நபர்களைக் கொண்ட ஒரு தலைமைக் குழுவைப் பெற்று இருக்கவில்லையென்றால், நூறு பேர்களைக் கொண்ட பள்ளிக்கூடம் நன்கு இயங்க முடியாது. ஒவ்வொரு அமைப்பிலும், பள்ளியிலும் படைப்பிரிவிலும், ஆலையிலும், அல்லது கிராமத்திலும், கட்சியை போல்ஷிவிக்மயமாக்குவதற்கான ஸ்டாலினின் பன்னிரெண்டு நிபந்தனைகளில் ஒன்பதாவது நிபந்தனையை அதாவது, தலைமையின் ஒரு மையத்தை நிறுவுவதை நிறைவேற்ற வேண்டும். டிமிட்ரோவ் முன்னணி ஊழியர் கொள்



படிப்பகம்

www.padippakam.com

கைபற்றிய தனது விவாதத்தில் குறிப்பிட்டுள்ள நான்கு அளவுகோள்களே — லட்சியத்திற்கு பரிபூரணமான அர்ப்பணிப்பு, மக்களுடன் தொடர்பு, ஒன்றின் திசையைதானே தனித்து அறியும் திறமை, கட்டுப்பாட்டை கடைபிடித்தல் — மேற்கூறப்பட்ட ஒரு தலைமைக் குழுவிற்கு உரிய அளவுகோள்களாகும். பிரதானப்பணிகளை — யுத்தம், உற்பத்தி, கல்வி (சீர் செய்துகொள்ளுதல் உட்பட) ஆகியவற்றை-செயல்படுத்துவதிலும் சரி அல்லது வேலைகளை சரிபார்ப்பது, ஊழியர்களின் வரலாற்றை ஆராய்வது அல்லது பிற நடவடிக்கைகளிலும் சரி, பொதுவான அறைகூவலை குறிப்பிட்ட வழிகாட்டுதலுடன் இணைக்கும் வழிமுறையோடு, தலைமைக்குழுவை பரந்துபட்ட மக்களுடன் தொடர்புபடுத்தும் வழிமுறையையும் மேற்கொள்வது அவசியமானதாகும்.

4. நம்முடைய கட்சியின் எல்லா நடைமுறை வேலைகளிலும், எல்லாச் சரியான தலைமையும் அவசியமாக ''மக்களிடமிருந்து, மக்களுக்காக'' அமைய வேண்டும். இதன் பொருள் என்னவென்றால்: மக்களின் கருத்துக்களை (சிதறியும் முறையற்றும் கிடக்கிறகருத்துக்கள்)எடுத்துக் கொள்ளவும் அவற்றில் கவனத்தை மையப்படுத்தவும் (ஆய்வின் மூலம் அவற்றை மையப்படுத்தப்பட்ட, முறையுள்ள கருத்துகளாக மாற்றி அமைக்கவும்) அதன்பின் மக்களிடம் சென்று அந்த கருத்துக்களை அவர்கள், தங்கள் சொந்தக் கருத்துகளாகத் தழுவிக்கொண்டு அவற்றுடன் தங்களை உறுதியாகப் பிணைத்து, அவற்றைச் செயலில் நடைமுறை படுத்தும் வரை அந்தக்கருத்துக்களைப் பிரச்சாரம் செய்யவும், தெளிவுபடுத்தவும், அப்படிப்பட்ட நடவடிக்கைகளின்போது அந்த கருத்துக்களின் சரியானதன்மையைச் சோதிக்கவும் வேண்டும் என்பதேயாகும்.

அந்தக் கருத்துகள் பாதுகாக்கப்படவும், செயல்படுத்தப்படவும் செய்யும் வகையில், மறுபடியும் மக்களிடமிருந்து வருகிற கருத்துக்களில் கவனத்தை மையப்படுத்தவும், மறுபடியும் மக்களிடம் செல்லவும் வேண்டும் ஒரு முடிவற்ற சுருள் வட்ட அடிப்படையில் மேலும் மேலும்அவ்வாறு செய்ய செய்ய அந்த கருத்துக்கள் ஒவ்வொரு தட்வையும் மிகவும் சரியானதாகவும் மிகவும் அவசியமானதாகவும் வளர்ச்சியுடையதாகவும் மாறுகிறது. இதுதான் அறிவைப்பற்றிய மார்க்சிய தத்துவமாகும்.



படிப்பகம்

www.padippakam.com

5. ஒரு ஸ்தாபனத்தில் அல்லது ஒரு போராட்டத்தில் தலைமைக்கும் மக்களுக்கும் இடையிலான ஒரு சரியான உறவு பற்றி கருத்து, தலைமையைப் பொறுத்தமட்டில் சரியான சிந்தனைகள் "மக்களிடமிருந்து, மக்களுக்கு" என்பதன் மூலம்தான் (அடைய முடியும்) என்ற கருத்து, தலைமையின் சிந்தனைகள் நடைமுறையில் செயல்படுத்தப்படும்போது பொதுவான அறைகூவல் குறிப்பான வழி காட்டுதலுடன் இணைக்கப்பட வேண்டும் என்ற கருத்து— இந்தக் கருத்துக்கள் எல்லாம் இப்பிரச்சினைகள் மீது நமது ஊழியர்கள் மத்தியில் நிலவுகின்ற தவறான கண்ணோட்டங்களை சரிசெய்வதற்காக நடத்தப்படுகின்ற தற்போதைய சீர் செய் இயக்கத்தின் போது எல்லா இடங்களிலும் பரப்பப்பட வேண்டும். அநேக தோழர்கள், செயல்வீரர்களைக் கொண்டு ஒரு தலைமைக் கருவை உருவாக்குவதின் முக்கியவத்தைபார்ப்பதில்லை, அல்லது அவ்வாறு செய்வதில் சிறப்பாக இல்லை; இந்தத் தலைமைக் கருவை பரந்து பட்ட மக்களுடன் தொடர்பு படுத்துவதின் முக்கியத்துவத்தை அவர்கள் பார்ப்பதில்லை அல்லது அவ்வாறு செய்வதில் சிறப்பாக இல்லை; அதனால் அவர்களுடைய தலைமை அதிகாரத்துவ தன்மையுடையதாகவும், பரந்துபட்ட மக்களிடமிருந்து தனிமைப்படுத்தப்பட்டதாகவும் ஆகிறது. அநேக தோழர்கள் பரந்துபட்ட மக்கள் போராட்டங்களின் அனுபவத்தைத் தொகுப்பதின் முக்கியத்துவத்தை பார்ப்பதில்லை; அல்லது அவ்வாறு செய்வதில் சிறப்பா இல்லை; மாறாக தங்களை புத்திசாலிகளாகக் கற்பனை செய்து கொண்டு, தங்களுடைய அகநிலைச் சிந்தனைகளை முன்னிலைப் படுத்திப் பேசுவதில் அதிக ஆர்வம் உள்ளவர்களாக இருக்கிறார்கள்; எனவே அவர்களுடைய சிந்தனைகள் வெற்றாகவும் நடைமுறை சாத்தியம் அற்றதாகவும் ஆகிறதுஅநேக தோழர்கள் ஒரு பணி சம்பந்தப்பட்ட ஒரு பொதுவான அறை கூவலை வெளியிடுவதோடு திருப்தி அடைந்து கொள்கிறார்கள்; ஆனால் அதை குறிப்பிட்ட, ஸ்தூலமான வழி காட்டுதலுடன் உடனடியாகத் தொடர்ந்து செய்வதின் முக்கியத்துவத்தைப் பார்ப்பதில்லை அல்லது அவ்வாறு செய்வதில் சிறப்பாக இல்லை; அதனால் அவர்களுடைய அறைகூவல் அவர்களுடைய உதடுகள் அல்லது காகிதம் அல்லது மாநாட்டு அறையுடன் மட்டுமே தங்கி விடுகிறது; அவர்களுடைய தலைமை அதிகாரத்துவ தன்மையுடையதாக ஆகிறது. தற்போது சீர் செய் இயக்கத்தின்போது, நாம் இத்தவறுகளைச் சரிசெய்து கொள்ள வேண்டும்; நமது ஆய்விலும், வேலைகளைப் பரிசோதிப்பதிலும், ஊழியர்களின் வரலாறுகளை ஆராய்வதிலும் தலைமையை பரந்துபட்ட மக்களுடன் இணைக்கும் வழி



படிப்பகம்

www.padippakam.com

முறைகளையும் பொதுவானதை குறிப்பானதுடன் இணைக்கும் வழிமுறைகளையும் நாம் கற்றுக் கொள்ளவேண்டும்; மேலும் இந்த வழிமுறைகளை நமது எதிர்கால வேலைகள் அனைத்திலும் கையாள வேண்டும்.

6. தலைமையின் சரியான சிந்தனைகளை உருவாக்குவதற்காக மக்களின் சிந்தனைகளை எடுத்துக்கொண்டு, அவற்றில் ஒருமுகப்பட்டு, பிறகு மக்களிடம் சென்று, அச்சிந்தனைகளில் உறுதியாக நின்று அவற்றைச் செயல்படுத்து — இதுதான் தலைமையின் அடிப்படை வழிமுறையாகும். சிந்தனைகளை ஒருமுகப்படுத்தும் செயல் போக்கிலும் அவற்றில் உறுதியாக நிற்கின்ற செயல்போக்கிலும், பொதுவான அறைகூவலை குறிப்பான வழிகாட்டுதலுடன் இணைக்கும் வழிமுறையைப் பின்பற்றுவது அவசியமானதாகும்; இது அடிப்படை வழிமுறையின் ஒரு பகுதி உறுப்பாகும். பல நிகழ்ச்சிகளில் கொடுக்கப்பட்ட குறிப்பான வழிகாட்டுதலிலிருந்து பொதுவான சிந்தனைகளை (பொதுவான அறை கூவல்களை) உருவாக்கு; பலவேறுபட்ட அணிகளில் சோதனைக்கு அவற்றை உட்படுத்து (நீங்கள் மட்டும் செய்வதோடு நிறுத்திக் கொள்ளாமல், அவ்வாறு செய்யும்படி பிறரிடம் சொல்வதின் மூலமும்;) பிறகு புதிய அநுபவத்தில் ஒருமுகப்படு (அதனைத்தொகு); பொதுவாக மக்களை வழிகாட்டுவதற்காக புதிய வழிகாட்டுதலை உருவாக்கு; தோழர்கள் இதனை தற்போதைய சீர்செய் இயக்கத்திலும் செய்யவேண்டும்; பிற எல்லா வகைப்பட்ட வேலைகளிலும் செய்ய வேண்டும். இதனை அதிகத் திறமையுடன் செய்கின்ற போது நல்லதலைமை உருவாகிறது.

7. எந்த ஒரு வேலையையும் (புரட்சி யுத்தம் உற்பத்தி அல்லது க்ல்வி சம்பந்தப்பட்டவேலை; சீர்செய் இயக்கம், வேலை அல்லது ஊழியர்களின் வரலாற்றைச் சோதிப்பது; பிரச்சார வேலை ஸ்தாபன வேலை' எதிரியின் உளவு வேலையைத் தடுத்தல், மற்றும் பிறவேலைகள், இவற்றில்எதுவாகயிருப்பினும்) கீழ்மட்டஅணிகளுக்கு அளிக்கும்போது, ஒரு மேல்மட்ட ஸ்தாபனமும் அதனைப் பிற துறைகளும் எல்லா வேலைகளிலும் சம்பந்தப்பட்ட கீழ்மட்ட ஸ்தாபனத்தின் தலைவர் பொறுப்பை எடுத்துக்கொள்ளும் வகையில் அவரைக் கவனிக்க வேண்டும்; இந்த வழியின் மூலம் உழைப்புப் பிரிவினை, ஒன்றுபட்ட மத்தியத் தலைமை ஆகிய இரண்டையும் பெற முடியும். உயர் மட்டத்தில் உள்ள ஒரு துறை, கீழ்மட்ட ஸ்தாபனத்திற்குப் பொறுப்பான நபருக்கு (செயலாளர்,தலைவர்,



படிப்பகம்

www.padippakam.com

இயக்குநர் அல்லது பள்ளி முதல்வர்) ஒன்றும் தெரியாமல் அல்லது அவருக்கு பொறுப்பு அளிக்காமல், கீழ்மட்டத்தில் உள்ள தனது துறை சம்பந்தப்பட்ட துறைக்கு தானே செல்லக்கூடாது (எடுத்துக் காட்டாக, ஸ்தாபனம், பிரச்சாரம் அல்லது உளவு தடுத்தல் ஆகிய சம்பந்தப்பட்ட ஒரு உயர் துறை, கீழ் மட்டத்தில் உள்ள தனது துறை சம்பந்தம்பட்ட துறைக்கு தானே செலலக்கூடாது). எல்லா வற்றிக்கும் பொறுப்பானவர், குறிப்பிட்ட பொறுப்பு கொடுக்கப் ட்டவர் ஆகியோர் இரண்டு பேர்களுக்கும் தகவல் கொடுக்கபட வேண்டும்; பொறுப்பு அளிக்கப்படுதல் வேண்டும். உழைப்புப் பிரிவினையை ஒன்றுபடுத்தப்பட்ட தலைமையுடன் இணைப்பது மூலம் மேற்கண்ட மத்தியப்படுத்தப்பட்ட வழிமுறையானது, ஒரு குறிப்பிட்ட பணியை மேற்கொள்ள, எல்லாவற்றிக்கும் பொறுப்பான நபரின் மூலமாக, அதிக எண்ணிக்கையில் ஊழியர்களை-சில சமயம் ஒரு ஸ்தாபனத்தில் உள்ள அனைவர்களையும்-அணி திரட்டுவதைச் சாத்தியமாக்குகிறது; இவ்வாறு தனித்தனித் துறைகளில் உள்ள ஊழியர்களின் பற்றுக்குறையை சமாளிக்கிறது; கையில் உள்ள பவலைக்கு அதிக எண்ணிக்கையில் ஊழியர்களை தீவிரமாக செயல்பட வைக்கிறது. இதுவும்கூட தலைமையை பரந்துபட்ட மக்களுடன் இணைக்கின்ற ஒரு வழியாகும். எடுத்துக்காட்டாக, ஊழியர்களின் வரலாற்றை ஆராய்வதை எடுத்துக் கொள்வோம். இந்த வேலை தனிமையில் செயயப்பட்டால்,

அந்த வேலைக்குப் பொறுப்பான ஸ்தாபனத் துறையில் உள்ள ஒரு சிலரால் மட்டும் செய்யப்பட்டால், அது நிச்சயமாக நல்ல முறையில் செய்யப்பட முடியாது. ஆனால் அந்த வேலையில் பங்கெடுக்க தன்னுடைய ஊழியர்களில் பலரை அல்லது அனைவரையும் கூட அணி திரட்டுகின்ற ஒரு ஸ்தாபனத்தின் தலைவர்கள், மாணவர்களில் பலரை அல்லது அனைவரையும் கூட அணி திரட்டுகின்ற ஒரு குறிப்பிட்ட பள்ளியின் நிர்வாகத் தலைவர் மூலம் செய்யப்பட்டால்; அதே சமயத்தில் உயர் மட்டத்தில் உள்ள ஸ்தாபனத்துறையின் தலைமை உறுப்பினர்கள் தலைமையை மக்களுடன் இணைக்கும் கொள்கையைக் கையாண்டு சரியான வழி காட்டுதலை அளித்தால், அப்போது சந்தேகமின்றி ஊழியர்களின் வரலாறுகளை ஆய்கின்ற அந்தப் பணி திருப்திகரமாக நிறைவேற்றப்படும்.

8. எந்த ஒரு இடத்திலும், ஒரே சமயத்தில் ஏராளமான மையப் பணிகள் இருக்கமுடியாது. ஒரு குறிப்பிட்ட சமயத்தில்



படிப்பகம்

www.padippakam.com

ஒரே ஒரு மையப் பணிதான் இருக்க முடியும்; அத்துடன் இரண்டாந்திர அல்லது மூன்றாந்தர அளவில் முக்கியத்துவம் உடைய பிற பணிகளும் இருக்கும். அதன் விளைவாக, அந்த இடத்தில் அனைத்திற்கும் பொறுப்பான நபர், அங்கு போராட்டத்தின் வரலாற்றையும், சூழ்நிலைமையும் கணக்கில் கொண்டு, பல்வேறு பட்ட பணிகளை முறையான வரிசைக்கிரமத்தில் செய்ய வேண்டும். அவர் உயர் மட்டத்தில் இருந்து வருகின்ற செயல்குறிப்புகளின் மீதுதான் எதுவும் திட்டமிடாமலேயே, அப்படியே செயல்பட்டு அதன் மூலம் பலதரப்பட்ட மையப் பணிகளையும், குழப்பமான ஒழுங்கற்ற ஒரு நிலைமையையும் உருவாக்கக் கூடாது. ஒரு உயர் மட்ட ஸ்தாபனமும் ஒரே சமயத்தில் பல்வேறு பணிகளை அவற்றின் ஒப்பு நோக்கிய முக்கியத்துவத்தையும் அவசரத்தையும் சுட்டிக்காட்டாமல் அல்லது எது மையப்பணி என்பதைக் குறிப்பிட்டுக் காட்டாமல், ஒரு கீழ்மட்ட ஸ்தாபனத்திற்கு அளிக்கக் கூடாது; ஏனென்றால் இது கீழ்மட்டத்தில் உள்ளவர்கள் தங்களுடைய பணிகளில் எடுக்கவேண்டிய படிகளில் குழப்பத்திற்கு இட்டுச்செல்லும்; அதனால் எவ்வித நிச்சயமான விளைவுகளும் கிடைக்காது. ஒவ்வொரு பகுதியின் வரலாற்றுச் சூழ்நிலைகள், நிலவுகின்ற சூழ்நிலைகள் ஆகியவற்றின் வெளிச்சத்தில் முறையாக முழுச் சூழ்நிலையையும் கணக்கில் கொள்வதும், ஒவ்வொரு குறிப்பிட்ட காலகட்டத்திலும் வேலையின் புவிஈர்ப்பு மையத்தையும், தொடர்ச்சியையும் தீர்மானிப்பதும்; தீர்மானத்தை உறுதியாக எடுத்துச்சென்று, நிச்சயமான விளைவுகள் பெறுவதை உறுதிப்படுத்துவதும் தலைமையின் கலையின் ஒரு பகுதியாகும். இதுவும்கூட தலைமை வழிமுறையின் ஒருபிரச்சினையாகும்; தலைமையை பரந்துபட்ட மக்களுடன் இணைக்கின்ற, பொதுவானதை குறிப்பானதுடன் இணைக்கின்ற கொள்கைகளைக் கையாளும்போது மேற்கண்டதையும் தீர்க்க கவனம் எடுக்கப்படுதல் வேண்டும்.

9. தலைமையின் வழிமுறைகள் பற்றிய விரிவான விஷயங்கள் இங்கு கூறப்படவில்லை. இங்கு முன்வைக்கப்பட்டுள்ள கொள்கைகளின் அடிப்படையில் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள தோழர்கள் தாங்களே கடுமையாக சிந்திப்பார்கள் என்றும், தங்களுடைய சிருஷ்டித் தன்மையை (Creativeness) முழுமையாகச் செயல்படுத்துவார்கள் என்றும் நம்பப்படுகிறது. போராட்டம் கடுமையடைய அடைய பரந்துபட்ட மக்களின் தேவைகளுடன் தங்களுடைய தலைமையை நெருக்கமாக இணைப்பதற்கும், பொதுவான அறைகூவலை குறிப்பான வழிகாட்டுதலுடன் இணைப்ப



படிப்பகம்

www.padippakam.com

தற்கும், அதன்மூலம் தலைமையின் அகநிலைவாத, அதிகாரத்துவ தன்மைகளை முழுமையாகத் தகர்த்தெறிவதற்கும் கம்யூனிஸ்ட்களுக்கு அதிக அவசியம் ஏற்படும். நமது கட்சியின் முன்னிலையில் உள்ள அனைத்துத் தோழர்களும் எல்லா நேரங்களிலும் விஞ்ஞானபூர்வமான, மார்க்சிய தலைமை வழிமுறையை அகநிலைவாத, அதிகாரத்துவ தலைமை வழிமுறைக்கு எதிராக வைக்க வேண்டும்; முதலில் கூறியதை பின்னால் கூறியதை வெல்லப் பயன்படுத்த வேண்டும். அகநிலைவாதிகளும் அதிகாரத்துவ தன்மை கொண்டவர்களும் தலைமையை பரந்துபட்ட மக்களுடன் இணைக்கின்ற, பொதுவானதை குறிப்பானதுடன் இணைக்கின்ற கொள்கைகளைப் புரிந்து கொள்வதில்லை; அவர்கள் கட்சிவேலைகளின் வளர்ச்சிகளைப் பெரிய அளவில் தடுக்கிறார்கள். அகநிலைவாத, அதிகாரத்துவ தலைமை வழிமுறையை முறியடிக்க, நாம் விஞ்ஞான பூர்வமான மார்க்சிய தலைமை வழிமுறையை விரிவாகவும், ஆழமாகவும் வளர்க்க வேண்டும். ★

—நன்றி : சமரன்



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

டிசம்பர் 1986

'' வெகு ஜன இயக்கங்களில் வேலை செய்யும் ஒவ்வொரு கம்யூனிஸ்ட்டும் மக்களின் நண்பனாய் விளங்க வேண்டுமேயன்றி, அவர்களின் எசமானாக அல்ல. சளையாத ஆசிரியனாய் விளங்க வேண்டுமே தவிர, ஒரு அதிகார வர்க்க அரசியல்வாதியாக அல்ல. கம்யுனிஸ்ட்டுகளாகிய நாம் விதை போன்றவர்கள். மக்கள் மண் போன்றவர்கள் செல்லுமிடமெங்கும் நாம் மக்களுடன் ஐக்கியப்பட்டு, அவர்கள் மத்தியில் வேரூன்றி மலர வேண்டும். ''

—தோழர் மா சே துங்

வெளியீடு :

முற்போக்கு இளைஞர் அணி
கோவை

முகவரி :

பெ. சிவஞானம்
3, மாரியம்மன் கோவில் வீதி
உப்பிலிபாளையம்
கோவை-641015

படிப்பகம்